# சவால்மிக்க காலங்களும் ஆசியாவில் பொதுவெளி இறையியலின் பொருத்தப்பாடும்: இலங்கையை மையப்படுத்திய ஒரு நோக்கு

**அ. கி. மேரி டெல்சியா**
(விரிவுரையாளர், பொருளியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
delcia@univ.jfn.ac.lk

பொதுவெளி இறையியல் என்பது சமயம் மற்றும் பொதுவாழ்க்கையின் குறுக்கு வெட்டுக்களை விமர்சன ரீதியாக ஆராயும் கிறிஸ்தவ இறையியலின் ஒரு பிரிவாகும். இலங்கை போன்ற ஆசிய நாடுகளுக்கு பொதுவெளி இறையியல் சார் எண்ணக்கரு, வரலாறு என்பனவற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். வரலாற்று ரீதியான ஆவணங்கள் மற்றும் உள்ளடக்க பகுப்பாய்வுகள் என்பவற்றின் மூலமாகத் திரட்டப்பட்ட தரவுகள் என்பவற்றைக் கொண்டு பண்பு சார் ஆய்வு முறையியலில் இந்த ஆய்வு இடம்பெற்றுள்ளது. பொதுவெளி இறையியலானது நீதி, அமைதி, மனித உரிமைகள் மற்றும் சுற்றுப்புறச் சூழலின் நிலைபேறான தன்மை ஆகிய பிரச்சினைகளை தீர்க்க முயல்வதனூடாக, பொதுவெளியில் இறையியலின் பிரதிபலிப்பு மற்றும் பொது வாழ்க்கையின் நடைமுறை உண்மைகள் ஆகியனவற்றிற்கு இடையிலான இடைவெளியினைக் குறைப்பதற்கு முயல்கின்றது. ஆசியாவிலுள்ள பொதுவெளி இறையியலானது குறித்த பிராந்தியத்தின் தனித்துவமான கலாசார, சமய மற்றும் அரசியல் பின்னணிகளினால் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், ஆசிய இறையியலாளர்கள் பூர்வீக மரபுகள், விடுதலை இறையியல், பெண்ணிய இறையியல் மற்றும் பண்பாட்டு இறையியல் ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு தமது தனித்துவமான அணுகுமுறைகளை உருவாக்கியுள்ளார்கள். ஆசிய நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் வாய்ப்புகளை உரிய முறையில் கையாளுவதற்கு இது ஒரு மதிப்பு மிக்க கருவியாக காணப்படுகின்ற போதிலும், இக்கோட்பாடானது மேற்கத்தைய சூழலில் வளர்ந்த கருத்து என்பதனால், இதனை ஆசியாவின் கலாசார மற்றும் அரசியல் யதார்த்ததங்களுக்கு ஏற்ப மாற்றியமைப்பது முக்கியமாகின்றது. சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளை நிவர்த்தி செய்தல், உரையாடல் மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவித்தல், ஒதுக்கப்பட்ட சமூகங்களுக்கு அதிகாரமளித்தல், அநீதியை எதிர்த்தல், சமய உணர்வுகளை வழிச்செலுத்துதல், கோட்பாட்டு நடைமுறையை சமநிலைப்படுத்துதல், சமூக ஈடுபாடு மற்றும் சமூக நல்லிணக்கத்தினை ஏற்படுத்துதல் ஊடான சமூக மாற்றத்தை உருவாக்குதல் என்பன இதனால் எதிர்பார்க்கப்படுகின்றன. இவ்வாறாக, குழப்பவியல் வாதம், பௌத்தவியல் வாதம், இந்துவியல் வாதம் மற்றும் பல்கிறிஸ்தவ சபைகளின் ஊடாட்டம் போன்ற சமூகப் பொருத்தத்துடன் கூடிய ஆசிய இறையியல் மரபுகள் சார் நீண்ட கால பிரச்சினைகள் தீர்த்தல், ஆசியாவில் விரைவாக வளர்ந்துவரும் பொருளாதாரங்கள் எதிர்நோக்கும் உலகமயமாக்கம் மற்றும் நகரமயமாக்கம் போன்ற சமூகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தல் போன்ற பல்வேறுபட்ட வழிகளில் பொதுவெளி இறையியலானது 21 ஆம் நூற்றாண்டில் இலங்கை அனுபவித்துவரும் பல்வேறு சவால்கள் மற்றும் வாய்ப்புகளை எதிர்கொள்ளுவதற்கான மகத்தான ஆற்றலைக் கொண்டுள்ளது. காலநிலை மாற்றம்,

தொழில்நுட்ப முன்னேற்றங்கள், அரசியல் உறுதியற்ற தன்மை, பொருளாதார மற்றும் நிதி நெருக்கடிகள், சுகாதார பிரச்சினைகள் போன்ற புதிய சவால்களை உலகம் எதிர்கொள்வதால், பொதுவெளி இறையியலாளர்கள் கிறிஸ்தவ முன்னோக்குகளை வழங்குவதிலும் பொதுநலனுக்காக வாதிடுவதிலும் தொடர்ந்து முக்கியபங்கு வகிப்பார்கள். சமயம் மற்றும் சமய சார்பற்ற உரையாடல்களை வளர்ப்பதன் மூலம் இது ஆசியாவில் குறிப்பாக இலங்கையில் மிகவும் நியாயமானதும் சமமானதும் நிலையானதுமான எதிர்காலத்தைப் பின்தொடர்வதில் பங்களிக்க முடியும்.

**திறவுச்சொற்கள்:**
பொதுவெளி இறையியல், எண்ணக்கரு, வரலாறு, ஆசியா, இலங்கை.

# இலங்கையின் தேசியவாதச் சிந்தனை உருவாக்கத்தில் சமயங்களின் வகிபங்கு:
## 1915 இனக்கலவரத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**கலாநிதி தி. செல்வமனோகரன்**
(முதுநிலை விரிவுரையாளர், சைவசித்தாந்தத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
tselvan@univ.jfn.ac.lk

இலங்கைக்கு 1505 இல் ஐரோப்பியர்கள் வருகைதந்த போது அது கோட்டை, யாழ்ப்பாணம், கண்டி என மூன்று இராட்சியங்களாகப் பிரிந்திருந்தது. காலனிய ஆட்சிக்காலமே ஒன்றிணைந்த இலங்கையை 1815 இல் உருவாக்கியது. அந்நிலை இன்றுவரை நீடித்து வருகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஒருசில கலவரங்கள் காலனிய அரசுக்கு எதிராக நடைபெற்றிருந்த போதும் அது பெரியளவில் வளர்த்தெடுக்கப்படவில்லை. இலங்கையில் நிகழ்ந்த எழுச்சி என்பது பண்பாட்டெழுச்சியாகவே அடையாளப்படுத்துகிறது. கிறிஸ்தவமிசனரிகளின் வழி அறிமுகமாகிய 'நவீனத்துவம்' இலங்கைச் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலுமான கட்டுமானங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. சமூகம், அரசியல், பொருளாதாரம், சமயம், கல்வி, தொழில்வாய்ப்பு, கலை கலாசாரங்கள் என எல்லாத் தளங்களிலும் அது பிரதிபலித்தது. கிறிஸ்தவத்தின் பன்முகத்தளங்களிலான இயங்கியல், சுதேசிகளை எதிர்த்தளத்திலான புத்துருவாக்கச் சிந்தனைக்கு உந்தித்தள்ளியது. எல்லாத் தளங்களிலும் சுதேச மீட்டுருவாக்கம் முதன்மை பெற்றது. பொருளாதாரத்தில் புதிய குட்டி முதலாளிய உருவாக்கம் சமூகத்தின் அசைவியக்கத்தில் தாக்கத்தைச் செலுத்துகிறது. சமயம், மொழி என்பன முதன்மையுற்றன. புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சமயங்களுக்குச் சமமாக, புரட்டஸ்தாந்து சைவம், புரட்டஸ்தாந்து பௌத்தம் என்பன உருவாயின. அதேவேளை இஸ்லாம் தன் நிலையிலிருந்து பெரிதும் மாறாவிடினும் நவீன கல்விக்கொள்கையின் வழி தன்னைப் புத்தாக்கம் செய்து கொண்டது. சமூகத்தின் பன்முகத்தளங்களில் சமயங்களிடையே பூசல்கள் உருவாயின. 1915இல்